இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 49 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 10 – புதன்கிழமை 27 செப்டம்பர் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 49 : Thiruvalluvar Year - 2054 - Purattasi 10 - Wednesday 27 September 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## பெண் ஓதுவார்கள் நியமனம்: அமைச்சர் சேகர்பாபுவை வாழ்த்துகிறேன்!

# பெரியாரின் நெஞ்சில் நமது திராவிட மாடல் அரசு வைக்கும் ‘பூ’!

## சமூக வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்!

**சென்னை, செப்.27-**

**இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயில்களில்ஓதுவார்பணியிடங்களுக்கு பெண் ஓதுவார்கள்தேர்வு செய்யப்பட்டு பணிநியமன ஆணைகள் வழங்கப் பட்டது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் “பெரியாரின் நெஞ்சில் நமது திராவிட மாடல் அரசு வைக்கும் ‘பூ’ இது” என்றும், “அமைச்சர் பி.கே.சேகர் பாபுவை வாழ்த்துகிறேன்!” என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

*இது பற்றிய விபரம் வருமாறு:*

தந்தை பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை கலைஞர் அகற்றினார் அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் சட்டம் கொண்டு வந்து!

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆக வேண்டும் என்ற தந்தை பெரியாரின் கனவை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முன்னின்று செயல்படுத்திய திட்டம். இவ்விருவரின் கனவை நனவாக்கும் வகையில், அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்பதை கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நிறைவேற்றி காட்டிவிட்டார்.



**திருக்கோயில்களில் 24 பயிற்சி பெற்ற அர்ச்சகர்கள் நியமனம்!**

14.8.2021 அன்று சென்னை கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில்இந்துசமயஅறநிலையத் துறையின் சார்பில் திருக்கோயில் களில் பணிபுரிவதற்காக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற அரசாணையின் கீழ் 24 பயிற்சி பெற்ற அர்ச்சகர்களுக்கு திருக்கோயில் களில் பணிபுரிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பணி ஆணைகளை வழங்கி வாழ்த்தினார்.

அதே போன்று கோவில் கருவறைக்குள்ளும் பெண்கள் போகும் வகையில் முதல்வர் அவர்கள் முன்னெடுப்பை எடுத்துள்ளார். 29 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணைகளையும் வழங்கினார்.

**முதன் முதலாக பெண் ஓதுவார்கள் நியமனம்!**

வரலாற்றில் பதிவு செய்யத் தக்க வகையில் பெண் ஓதுவார்களுக்கும் பணி நியமன ஆணையை வழங்கினார் முதல்வர்.

நாட்டிலேயே பெண்கள் ஓதுவாராக நியமிக்கப்பட்டது இதுவே முதல் முறையாகும். அந்த வகையில் ஒட்டு மொத்த இந்தியாவிற்கும் தான்தான் வழிகாட்டி என்பதை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இதன் மூலம் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

பெண் ஓதுவார்களில் சுகாஞ்சனா என்ற பெண் ஓதுவார் ஒருவருக்கு தாம்பரம் அருகே மாடம்பாக்கத்தில் உள்ள இந்து சமய அறநிலையத் துறை கோயிலில் ஓதுவாராக நியமனம் செய்யப்பட்ட பணி ஆணையை முதல்வர் அவர்கள் தனது திருக்கரத்தால் வழங்கினார்.

இவை எல்லாம் தந்தை பெரியார் கனவு இன்றைக்கு திராவிட இயக்க வழித்தோன்றல்கள் மூலம் நிறை வேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றது. சமூக சமதர்ம கோட்பாடுகள் மூலம் வழங்கிய உரிமைகள் இன்று அனைத்து மக்களுக்கும் கிடைத்துக் கொண்டிருக்கின்றன.

**மொத்தம் 10 பெண் ஓதுவார்கள்!**

இந்நிலையில் திருக்கோயில் களுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ள 15 ஓதுவார்களுக்கு பணி நியமன ஆணைகளைஇந்துசமயஅறநிலைய துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (25-09-2023) வழங்கினார். அதிலும் ஆணுக்கு பெண் நிகர் என்பதை நிரூபிக்கின்ற வகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் ஏற்கனவே 5 திருக் கோயில்களில் பெண் ஓதுவார்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது புதிதாக நியமிக்கப்பட்டிருக்கின்ற 15 ஓதுவார் களில் 5 பெண் ஓதுவார்கள் நியமனம் என்பது உண்மையிலேயே பெரும் சாதனைக்குரியதாகும். இதுவரை நியமிக்கப்பட்டுள்ள 10 பெண் ஓதுவார்களுமே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி ஏற்பட்ட பிறகுதான் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

*இந்நிலையில் இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-*

**சமத்துவத்தை நோக்கிய தமிழினத்தின் பயணத்தில் மற்றுமோர் மைல்கல்! திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமூகநீதிச் சாதனை மகுடத்தில் மற்றுமோர் வைரம்!**

**சுருங்கச் சொன்னால், திராவிட இயக்கப் பற்றாளர்கள் புகழ்வது போல், இது “பெரியாரின் நெஞ்சில் நமது திராவிட மாடல் அரசு வைக்கும் ‘பூ’!”**

**இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களை வாழ்த்துகிறேன்!**

இவ்வாறு தமது வலைதளப் பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

## “தாய்வீட்டுச் சீதனம்” என மகிழ்கின்றனர்!

# முதல்வர் மு.க.ஸ்டாலினின் செல்வாக்கு பெண்களிடம் உயர்ந்துள்ளது!

## கலைஞர் மகளிர் உரிமைத் தொகை குறித்து ‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேடு புகழாரம்!

**சென்னை, செப். 27 -**

**தாய் வீட்டுச் சீதனம் என பெண்கள் மகிழ்கின்றனர். மகளிர்க்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதன் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மகளிர் மத்தியில் செல்வாக்கு உயர்ந்து கொண்டிருக்கிறது என்று ‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ (23.09.2023) ஆங்கில நாளேடு புகழாரம் சூட்டியுள்ளது.**

**இது குறித்து “தி நியூஇந்தியன் எக்ஸ்பிரஸ்” நாளேட்டில் வெளியாகியுள்ள சிறப்புக் கட்டுரை வருமாறு:-**



HARNESSING WOMEN POWER IN ELECTORAL POLITICS

K EZHILARASAN

FOOTNOTE

NOT many took serious note of the vignette of kolams (rangoli) thanking Chief Minister M K Stalin in front of houses on September 15, the day he launched the Kalaignar Magalir Urimai Scheme that gives ₹1,000 a month to 1.06 crore women heads of families.

The traditional kolam, a prerogative of women who draw the patterns by sunrise, was once used by former chief minister M Karunanidhi to popularize his election symbol, the 'Rising Sun' in his maiden electoral contest from Kulithalai in 1957.

The 'Rising Sun' that was then a symbol of independents needed some publicity locally and Karunanidhi had asked the women to draw it in front of their homes even as he solicited their support. That the women obliged finds mention in his autobiography 'Nenjukku Neethi'. In a polling booth for women at Thaneerpalli, the opponent Congress candidate did not get even a single vote when the constituency sent Karunanidhi to the Assembly, thanks to women.

The kolams thanking Stalin were not only reminiscent of Karunanidhi winning over women through his pioneering acts and schemes launched after the DMK came to power in 1967 like awarding property rights to women in the family but also pointed to the present chief minister endearing himself to women.

While eliciting the views of common people on the honorarium scheme, a woman in an Ariyalur village termed it "Thai Veetu Seethanam." I was taken aback as her words contained some shade of MGR-ism in them.

Stalin, too, while launching the Puthumai Penn scheme benefiting women students, said, "I would support you like a father". In a similar vein, during the launch of the Magalir Urimai scheme, Stalin spoke about the love and respect he had for women in his family, evoking the women's sentiments with expressions like 'Thayin Karunai' (mother's mercy), 'manaiviyin uruthunai' (wife's support) and 'magalin peranbu' (daughter's love).

A few days after the launch, I was talking with two acquaintances with political inclinations opposed to DMK. Both their wives had received ₹1,000, which could mean that votes from their families may go over to the DMK.

Of course, political affiliations of men do not necessarily influence the voting pattern of women in their families. Many men complaining of their wives and mothers casting vote in favour of J Jayalalithaa and M G Ramachandran against their wishes had happened.

Now with Stalin launching back-to-back schemes benefiting women, his popularity is increasing among them, going by their reactions. Schemes such as Vidiyal Payanam (free bus service for women), Puthumai Penn (₹1,000 monthly aid for girls going for higher studies) and CM's breakfast scheme for school students have already become topics of discussion among women.

So the Kalaignar Magalir Urimai Scheme may be changing the political dynamics bringing more supporters to the DMK as first-time voters, women and subaltern classes are seemingly impressed by the welfare measures.

Though the DMK enjoyed substantial support from women for its schemes in its initial days, it lost it when MGR launched the AIADMK. MGR came in as a protector of women, an image cultivated through films and a personal aura created through his customary address of women as 'Thai Kulam'.

MGR might not have launched any women-specific welfare project other than his signature mid-day meal scheme, but remained an icon for women. His series of films with titles prefixed or suffixed with the 'Thai' (mother) evoked a maternal sentiment among voters.

Next came J Jayalalithaa, the former chief minister who enjoyed the lion's share of support from women. The ubiquitous persona of MGR and the party's traditional support base among subalterns helped her initially.

Later she cultivated an image as the champion of women. Besides schemes like Thottil Kuzanthai, free mixer-grinder, free two-wheelers for working women, she was seen as a saviour of victims of sexual violence. She lived up to the image by sacking party leaders accused of disloyalty or misbehaviour by women and her women supporters never let her down.

The present DMK government's targeted schemes aimed at uplifting women by changing their livelihood, dignity, honour and lifestyle are doing the same magic to Stalin's image and popularity that Karunanidhi's charisma, women's faith in MGR and Jayalalithaa's iron lady image did in the past.

Schemes' magic

Schemes to uplift women by changing their livelihood, honour and lifestyle are doing the same magic to Stalin's popularity that Karunanidhi's charisma, women's faith in MGR and Jayalalithaa's iron lady image did in the past

*Footnote is a weekly column that discusses issues relating to Tamil Nadu*

*K Ezhilarasan is chief reporter of TNIE's Tiruchy bureau*

1.06 கோடி குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 கொடுக்கக்கூடிய கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டத்தை கடந்த செப்டம்பர்15–ஆம்நாள் தொடங்கி வைத்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து வீடுகளுக்கு முன்னால் பெண்கள் வண்ண வண்ணக் கோலங்களிட்ட அழகினைப் பலரும் பெரிதாகக் கவனிக்கவில்லை.

தொன்று தொட்டு விடியற் காலையில் பெண்கள் வீட்டிற்கு முன்னால் கோலங்கள் தீட்டி அழகுபடுத்துவது அவர்களது முன்னுரிமை. இதனை 1957–ஆம் ஆண்டு குளித்தலை தொகுதியிலிருந்து முதன் முதலாக சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்ட பொழுது, உதயசூரியன் சின்னத்தை முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பிரபலப்படுத்திப் பயன்படுத்திக் கொண்டார்.

**குளித்தலையில் கலைஞர் கையாண்ட முறை!**

‘உதயசூரியன்’ அந்தக் காலத்தில் சுயேட்சைகளின் சின்னமாக இருந்தது. அதற்கு உள்ளூரில் விளம்பரம் தேவைப்பட்டது. தாய்மார்களின் ஆதரவை நாடி கலைஞர் அவர்கள் தேர்தல் பரப்புரை செய்தபொழுது வீடுகளுக்கு முன்பு உதயசூரியன் சின்னத்தைக் கோலமாக வரைந்திடுமாறு பெண்களை அவர் கேட்டுக்கொண்டார்.

இதற்கு பெண்கள் இசைந்து அவ்வாறே செய்தனர் என்பதை கலைஞர் தனது வாழ்க்கை வரலாற்று நூலான ‘நெஞ்சுக்கு நீதி’யில் குறிப்பிட்டுள்ளார். தண்ணீர் பள்ளம் என்கிற ஊரில் வாக்குச் சாவடியில் கலைஞரை எதிர்த்து நின்ற காங்கிரசு வேட்பாளருக்கு ஒரு வாக்குக்கூட கிடைக்கவில்லை. இதற்கு பெண்களே காரணம்.

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கும் இந்த வண்ணக்கோலங்கள், கலைஞர் தனது முன்னோடியான செயல்களாலும், திட்டங்களாலும் தாய்மார்களின் உள்ளங்களை வென்றார் என்பதையும், 1967–ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக்கு வந்த பின்னர் பெண்களுக்கு சொத்துரிமைகள் வழங்கப்பட்டன என்பதையெல்லாம் நினைவூட்டுவது மட்டுமல்லாமல், தற்போதுள்ள முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெண்களிடத்தில் அன்பை உண்டாக்கும் திட்டங்கள் தீட்டி செயல்படுவதையும் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்த திட்டத்தைப் பற்றிய பொதுமக்களின் கருத்தை அறியச் சென்றபொழுது, அரியலூர் கிராமத்தில் ஒரு பெண்மணி இத்திட்டத்தை “தாய் வீட்டு சீதனம்” என்று குறிப்பிட்டார். அந்த அம்மையாரின் சொற்களில் ஒரு விதமான எம்.ஜி.ஆர்.–சாயல் இருப்பதைக் கண்டு வியப்புற்றேன்.

முதல்வர் மு.க.ஸ்டாலினும் கூட மாணவியருக்குப் பயனளிக்கும் புதுமைப் பெண் திட்டத்தை தொடங்கி வைத்த பொழுது ‘ஒரு தந்தையைப் போல் நான் உங்களுக்கு ஆதரவளிப்பேன்” என்று கூறினார். அதேபோன்று மகளிர் உரிமைத் திட்டத்தைத் தொடங்கிய போதும், தனது குடும்பத்தில் பெண்கள் மீது அவர் கொண்டிருந்த அன்பையும் மரியாதையையும் பற்றிப் பேசினார்.

அப்போது அவர் பயன்படுத்திய தாயின் கருணை, மனைவியின் உறுதுணை, மகளின் பேரன்பு ஆகிய சொற்றொடர்களால் பெண்கள் மீது தமது மனவுணர்வுகளை வெளிப்படுத்திக் காண்பித்தார்.

இத்திட்டத்தை அவர் அறிமுகம் செய்த சில நாள்களுக்குப்பின்னர் ‘தி.மு.க. எதிர்ப்பு அரசியல் சார்புடைய இரண்டு நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். இவ்விருவரின் மனைவிமார்களும் ரூ.1000 உரிமைத் தொகையைப் பெற்றிருந்தனர். இதன் பொருள் – அந்தக் குடும்பங்களின் வாக்குகள் தி.மு.க.வுக்குச் செல்லும் என்பதாகும்.

உண்மையில், ஆண்களின் அரசியல் ஈடுபாடுகள் அவர்களுடைய குடும்பத்து பெண்கள் வாக்களிக்கும் முறையை, பாங்கினை கட்டாயமாக மாற்றும் என்பதில்லை. தங்கள் மனைவிமார்களும், தாயார்களும் குடும்பத்து ஆண்களின் விருப்பத்துக்கு மாறாக வாக்களித்ததாக புகார் செய்வதும் நிகழ்ந்துள்ளது.

இப்பொழுது முழுக்க முழுக்க பெண்களுக்கு நன்மை தரும், பயனளிக்கும் திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்துவதால் பெண்கள் மத்தியில் அவருடைய செல்வாக்கு உயர்ந்து கொண்டிருக்கிறது. இது பெண்களின் கூற்று களிலிருந்து அறியப்படுகிறது. விடியல் பயணம் (பெண்களுக்கு கட்டணமில்லாப் பேருந்துப் பயணம்), புதுமைப் பெண் (மேல் படிப்புகளுக்குச் செல்லும் மாணவியருக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை), பள்ளி மாணவர்களுக்கான முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் ஆகிய திட்டங்கள் ஏற்கனவே பெண்களிடையே பேசு பொருளாக ஆகியுள்ளன.

ஆகவே, கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டமானது தமிழ்நாட்டு அரசியல் இயக்க நிலையையே மாற்றிக்கொண்டிருக்கலாம். முதல் முறையாக வாக்களிப்போர், மகளிர், கீழ்த் தட்டு வர்க்கத்தினர் (தி.மு.க.வின்) நல்வாழ்வுத் திட்டங்களால் பெரிதும் மகிழ்ச்சியுற்றிருக்கின்றனர். இது தி.மு.க.விற்கு மேலும் ஆதரவாளர்களைக் கொண்டு வந்து சேர்க்கிறது.

தற்போதைய தி.மு.க. அரசின் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட திட்டங்கள் பெண்களின் வாழ்வாதாரம், கண்ணியம், மரியாதை, அன்றாட வாழ்க்கை முறை ஆகியவற்றை மாற்றியமைப்பதன் மூலம் அவர்களைக் கைதூக்கி விடுவதைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளன.

இவ்வாறு ‘தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’ நாளேட்டில் வெளிவந்துள்ள கட்டுரையில் கூறப்பட்டுள்ளது.

> **கலைஞர் மகளிர் உரிமைத்தொகைத் திட்டமானது தமிழ் நாட்டு அரசியல் இயக்க நிலையையே மாற்றிக்கொண்டிருக்கலாம். முதல் முறையாக வாக்களிப்போர், மகளிர், கீழ்த்தட்டு வர்க்கத்தினர் (தி.மு.க.வின்) நல்வாழ்வுத் திட்டங்களால் பெரிதும் மகிழ்ச்சியுற்றிருக்கின்றனர். இது தி.மு.க.விற்கு மேலும் ஆதரவாளர்களைக் கொண்டு வந்து சேர்க்கிறது.**